ஆகவே, சில பல ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தால் பலன் பெருமா என்பதை யோசித்து, தக்க முடிவு எடுத்துக்கொள்ளப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Government Mental Hospital at Kilpauk

* 124 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. Minister for Public Health be pleased to state—

(a) Whether there is any proposal to celebrate the Centenary of the Kilpauk Government Mental Hospital; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: *(அ) & (இ) சென்னையிலுள்ள அரசு மனநல மருத்துவமனையின் நூற்றாண்டு விழா 12—9—1971-லிருந்து 23—9—1971 வரை கொண்டாடப்பட்டது. அவ்விழாவையொட்டி அரசு மனநல மருத்துவமனையில் 18—9—1971-லிருந்து 23—9—1971 வரை ஒரு கண்காட்சியும் நடத்தப்பட்டது.*

* 125 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state the total number of in-patients now being treated at the Kilpauk Government Mental Hospital?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: *சென்னை அரசு மனநல மருத்துவமனையில் 19—10—1971-ம் நாள் நிலைரப்படி உள்ளிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளின் மொத்த எண்ணிக்கை 1,725.*

X-ray films for Government Hospitals in Madras

* 126 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state whether X-Ray films are being purchased from Messrs Hindustan Photo Films, a Union Government undertaking, by the Madras City Government Hospitals.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: *ஆம். சில அளவுள்ளவை அவர்களின் முக்கிய வினியோகஸ்தர்களாகிய எக்ஸ்ரே அண்டு அலைடு பிராடெக்ஸ் இடமிருந்து வாங்கப்படுகின்றன.*

திரு. எம். தேவராசன்: *தலைவர் அவர்களே, உதகையிலே இருக்கக்கூடிய ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் எக்ஸ்ரே பிலிம்ஸ் தரம் உள்ளவைதானு? வெளிநாடுகளிலிருந்து வருகின்றவை போன்று அவை தரமுள்ளவையாக இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: *தலைவர் அவர்களே, அவை பயன்படுத்தப்பட்டு தரமுள்ளவை என்று ஒப்புக்கொள்ளப்பட்டு அவை எந்த எந்த அளவு உள்ளவையாக தயாரிக்கப்*